**பொது சுற்று நிருப இல. 02 - 161 / 2013**

எனது இல. FHB/EB/UNICEF/06/2013

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,

சுகாதார அமைச்சு,

சுவசிரிபாய,
வண. படிகம விமலவன்ஸ தேரோ
மாவத்தை,

கொழும்பு 10.

18 ஐப்பசி 2013

சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

சகல பணிப்பாளர்கள், போதனா வைத்திய சாலைகள் & மாகாண பொது வைத்திய சாலைகள்,

பணிப்பாளர், தேசிய சுகாதார சேவைகள் நிறுவனம்,

சகல மருத்துவ தலைவர்கள், மாகாண பொது வைத்திய சாலைகள் மற்றும் ஆதார வைத்திய சாலைகள்,

சகல நிறுவனத் தலைவர்கள்,

சகல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள்.

**ஐந்து வயதிற்கு கீழான குழந்தைகளிற்கான வயிற்றோட்டத்திற்கான சிகிச்சைக்கும் அதன் மூலம் உருவாகும் தீய விளைவுகளிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்குமாக நாகத்தாதுப்பொருட்களினை வழங்குதல்.**

வயிற்றோட்டத்திற்கு சிகிச்சையளிப்பதற்கும் அதன் முலம் உருவாகும் தீய விளைவுகளிலிருந்து ஐந்து வயதிற்கு கீழான குழந்தைகளை பாதுகாப்பதற்கும் நாகத்தாதுப்பொருட்களை வழங்குதலானது சான்று முலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் நோயின் தீவிரத்தன்மையானது மீள உருவாகாமல் குறைப்பதன் முலம் இதனால் உருவாகும் இறப்பு, ஆரோக்கியமற்ற நிலை, மற்றம் நோய்த் தாக்கத்தின் கால அளவு என்பவற்றை குறைப்பதுடன் நிர்ப்பீடனத் தொகுதியினை மேம்படுத்துவதன் முலம் 2-3 மாதங்களின் பின்பு நோய் மீளவும் உருவாகாமல் தடுக்கலாம். பிரதிப்பணிப்பாளர் நாயகம், பொதுமக்கள் சுகாதார சேவைகள் II, தலைமையில் நடைபெற்ற தாய், சேய் போஷணை உபகுழுவினால் இப் பரிந்துரை கலந்துரையாடப்பட்டதுடன் சுகாதார அமைச்சின் செயலாளர், தலைமையில் நடைபெற்ற போஷணை வழிப்படுத்தும் குழுவினால் மேலொப்பமிடப்பட்ட மேற்படி உறுதிப்படுத்தப்பட்ட சான்றானது தாய், சேய் போஷணை உப குழுவினால் சிபார்சு செய்யப்பட்டது.

எனவே கீழ்வரும் சிபார்சு செய்யப்பட்ட நாக தாதுப்பொருட்களை வழங்குவதற்கான விதிமுறையானது ஐந்து வயதிற்கு கீழான குழந்தைகளில் வயிற்றோட்டம் ஆரம்பமாகியதை தொடர்ந்து ஆரம்பிக்கப்படுவதன் முலம் வயிற்றோட்டத்திற்கு சிகிச்சையளிப்பதுடன் அதன் முலம் உருவாகும் தீய பாதிப்புகளிலிருந்து அவர்களை பாதகாக்கலாம். இந் நோக்கத்திற்காக அரச சுகாதார நிறுவனங்களிற்கு வழஙகப்படும் நாகத்தாதுப்பொருள் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் மருத்துவ வழங்கல் பிரிவில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. இவ் நாகத்தாதுப்பொருளில் வேறு தாதுப்பொருட்கள் (முக்கியமாக இரும்பு, கல்சியம்) உள்ளடங்கியிருக்க்கூடாது ஏனெனில் இவை மேற்படி தாதுப்பொருளின் அகத்துறிஞ்சலுடன் போட்டியிடும்.

| வயது பிரிவு | ஒரு வேளை மாத்திரை | கொடுக்கப்படும் தடவைகள் | கால அளவு |
|---|---|---|---|
| வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்படும் 6 மாதத்திற்கு கீழான வயதினையுடைய குழந்தைகள். | நாகத்தாதுப்பொருள் - 10 mg/நாள் | ஓவ்வொரு நாளும் உணவிற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்பும், உணவிற்கு 2 மணித்தியாலத்திற்கு பின்பும். | 10- 14 நாட்கள் |
| 6 -60 மாத வயதினையுடைய வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்படும் பிள்ளைகள் | நாகத்தாதுப்பொருள் -20 mg/நாள் | ஓவ்வொரு நாளும் உணவிற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்பும், உணவிற்கு 2 மணித்தியாலத்திற்கு பின்பும். | 10-14 நாட்கள் |

**நாகத்தாதுப்பொருள் தயாரிப்பும் வழங்கப்படும் முறையும்**

நாகத்தாதுப்பொருளானது பாணியாகவோ அல்லது நீரில் கரையக்கூடிய மாத்திரையாகவோ கிடைக்கும். குளிகையின் வலிமையானது நாகத் தாதுப்பொருள் 10 mg அல்லது 20 mg அத்துடன் பாணி – இரும்புத் தாதுப்பொருள் 10 mg/5 ml அல்லது 20 mg/5ml ஆக இருத்தல் வேண்டும்.

நீரில் கரையக்கூடிய மாத்திரைகள், 5ml வெளியேற்றப்பட்ட தாய்ப்பாலில் ( ஒரு தேக்கரண்டி) , வாய் மூலம் கொடுக்கப்படும் நீரிழப்பை தடுக்கும் கனரப்பான் அல்லது ஒரு வயதிற்கு கீழுள்ள குழந்தைகளிற்கு கொடுக்கப்படும் தூய நீரில் கரைக்கப்படவேண்டும். வயதான பிள்ளைகளிற்கு மாத்திரைகள் சப்பி சாப்பிடக்கூடியதாகவோ அல்லது சிறிதளவு தூய நீரில் கரைக்கக்கூடியதாகவோ இருக்க முடியும். வயிற்றோட்டத்துடன் வாந்தி இருப்பின் குழந்தை நாக மாத்திரையினை வாந்தி எடுத்து முடியும் வரை காத்திருந்து வேறு மாத்திரையை கொடுப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

**பக்க விளைவு**

அசாதரணமாக வயிற்றுக்குமட்டல் வாந்தியுடன் ஏற்படும். நாகத்தாதுப்பொருளை வழங்கும் போது குழந்தை வாந்தி எடுப்பின் மருத்துவ உத்தியோகத்தருக்கோ அல்லது அந்தப்பகுதி சுகாதார மருத்துவ உத்தியோகத்தருக்கோ அறிவித்தல் வேணடும்(MOH).

வயிற்றோட்டத்தினால் அவதியுறும் குழந்தைகள் வெளிநோயாளர் பிரிவிற்கோ, சிகிச்சை நிலையத்திற்கோ அல்லது வாட்டிற்கோ சமுகமளிக்கும் பட்சத்தில், அவர்களிற்கு 10-14 நாட்களிற்கு இதற்கான சிகிச்சைக்குரிய நாகத்தாதுப்பொருளினை போதுமானளவு வழங்குதலை தயவு செய்து உறுதி செய்துகொள்ளவும்.

தயவு செய்து இச்சுற்றுநிருபத்தில் உள்ளடங்கியுள்ள தகவல்களை சகல தொடர்பான சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் அறிய தரவும்.

ஒப்பமிடப்பட்டது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்,

செயலாளர், சுகாதார அமைச்சு,

மேலதிக செயலாளர், மருத்துவ சேவைகள்,

மேலதிக செயலாளர், பொது மக்கள் சுகாதார சேவைகள்,

பிரதி பணிப்பாளர் நாயகம், மருத்துவ சேவைகள் 1 & 11,

பிரதி பணிப்பாளர் நாயகம், பொது மக்கள் சுகாதார சேவைகள் 1 & 11,

பிரதி பணிப்பாளர் நாயகம், ஆய்வு கூட சேவைகள்,

பணிப்பாளர், தாய், சேய் சுகாதாரம்,

பணிப்பாளர், தனியார் சுகாதார அபிவிருத்தி பிரிவு,

பணிப்பாளர், மருத்துவ வழங்கல் பிரிவு,

பணிப்பாளர், மருத்துவ சேவைகள்,

பணிப்பாளர், போஷணை,

பணிப்பாளர், போஷணை தொடர்பாடல் பிரிவு,

பணிப்பாளர், சுகாதார கல்வி பணியகம்,

பணிப்பாளர், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்,

சகல பீடாதிபதிகள், மருத்துவ பீடம்,

தலைவர், இலங்கை மருத்துவ நிர்வாகக் கல்லூரி,

தலைவர், குழந்தை நோயியல் தொடர்பான இலங்கைக் கல்லூரி,

தலைவர், இலங்கை சமுக மருத்துவ நிர்வாகக் கல்லூரி,

தலைவர், குழந்தை பிறப்பு சார்ந்த சபை,

தலைவர், இலங்கை பொது மருத்தவ பயிற்ச்சியாளர் கல்லூரி,

தலைவர், இலங்கை சுதந்திர மருத்துவ பயிற்சியாளர் சபை.